**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035300

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் ஊ.த.த. பிரிவு, Year: ஆண்டு 2017 FIR No. மு.த.அ. எண் 13/07 Date: நாள் 24.11.17.

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Act 1988

   (iii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 20.11.17 Date from : நாள் முதல் Date to : நாள் வரை அன்றும் 23.11.17

   Time Period : நேர அளவு - Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.11.17 Time நேரம் 11.00hrs. FIR registered on 24.11.17 at 1300hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.11.17. Time நேரம் 11.00hrs.

4. Type of Information : Written/Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி தலைமை மின் பொறியாளர் அலுவலகம், மின் கோட்டம் - தஞ்சாவூர் - தெற்கு பகுதி.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ரமேஷ் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S. இராமலிங்கம்.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28.12.1967 (d) Nationality : நாட்டினம் இந்து (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் ஒப்பந்ததாரர். (g) Address : முகவரி 57/2326, [illegible] தெரு தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   கண்ணன், உதவி மின் பொறியாளர், தலைமை மின் பொறியாளர் மற்றும் பகிர்மான அலுவலகம், மின் கோட்டம், [illegible], தஞ்சாவூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 24.11.2017ம் தேதி காலை 11.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தஞ்சாவூர் வெட்டுக்காரத்தெருவைச் சேர்ந்த திரு.R.ரமேஷ், த/பெ. S.இராதாகிருஷ்ணன் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: R.ரமேஷ், த/பெ.S.இராதாகிருஷ்ணன், 57/2326, வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர். பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் டவுன் வெட்டுக்காரத் தெருவில் அம்மா யசோதா மற்றும் மனைவி குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். கொத்தனார் வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். வெட்டுக்காரத் தெரு கதவு எண்.57/2326-ல் தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம் என வீடுகள் கட்டியுள்ளேன். தரைத்தளத்தின் மின் இணைப்பு எண்.472-002-396, முதல் மேல்தளத்தின் மின் இணைப்பு எண். 472-002-544 ஆகும். மின் இணைப்பு இரண்டும் என் அம்மா யசோதா பெயரில் உள்ளது. முதல் தளத்தின் மின் இணைப்பிலிருந்து

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Ramesh 24.11.2017 — (signature) 24.11.17.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.11.17 – 15.15hr.

Name: பெயர் R. VENKATESAN.
Rank: நிலை Inspector of Police, No. எண் V&AC, Thanjavur.

இரண்டாவது தளத்திற்கு சப்ளை கொடுத்துள்ளேன். தரைத்தளத்தையும், முதல் தளத்தையும் தலா மூன்று லட்சம் பெற்று ஒத்திக்கு வைத்துள்ளேன். என் அம்மா யசோதா 2009-ம் ஆண்டு வெட்டுக்காரத் தெரு, கதவு எண்.57/2326 வீட்டை எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார்கள். இந்த பத்திர உரிமைப்படி மேற்கண்ட இரண்டு மின் இணைப்புகளையும் என் பெயருக்கு மாற்றி தர வேண்டி தமிழ்நாடு மின்சார வாரிய உதவி மின் பொறியாளர் திரு.கண்ணன் என்பவரிடம் 06.11.2017ந் தேதி மனு கொடுத்தேன். மனுவுடன் இரண்டு மின் இணைப்புகளின் அட்டைகள் (472-002-396, 472-002-594), செட்டில்மெண்ட் பத்திரம் ஜெராக்ஸ் காப்பி, வீட்டு வரி ரசீது ஆகியவற்றை கொடுத்தேன். பின்னர் C.I. வந்து என் வீட்டை பார்த்த பிறகு, மேற்கண்ட இரண்டு மின் இணைப்புகளுக்கும் அடிசனல் லோடு உள்ளது. தனியாக இரண்டிற்கும் மனு கொடுத்து எலெக்ட்ரிகல் ஒப்பந்தகாரரிடம் கையெழுத்து வாங்கி மனு கொடுக்க சொன்னார்கள். இரண்டாவது தளத்திற்கு தனியாக மின் இணைப்பு கோரி தனியாக ஒரு மனுவும், அடிசனல் லோடிற்காக இரண்டு மின் இணைப்புகளுக்கு தனியாக இரண்டு மனுக்களும், இத்துடன் வீட்டு வரி ரசீது நகல், செட்டில்மெண்ட் பத்திர நகல், மின் கட்டண ரசீது நகல் (இரண்டு) எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்தகாரர் கையெழுத்து பெற்று, 20.11.2017ந்தேதி கோர்ட் அருகில் AR மைதானம் பின்புறமுள்ள EB ஆபிஸுக்கு சென்று, அங்கிருந்த A.E. கண்ணனிடம் கொடுத்தேன். மூன்று மனுக்களையும் வாங்கி வைத்துக் கொண்டார். இதற்கு பணம் கட்ட வேண்டுமா என கேட்டேன். அதற்கு A.E., இரண்டு மின் இணைப்புகளுக்கு பெயர் மாற்றம் செய்ய தலா ரூ.200/- வீதம் ரு.400/-ம், புதிய மின் இணைப்பிற்கு ரூ.1600/-ம் மொத்தம் ரூ.2000/-மும், மேற்கொண்டு தனக்கு லஞ்சமாக ரூ.7500/-ம், ஆக மொத்தமாக ரூ.9500/- கொண்டு வந்தால் வேலையை முடித்து தருகிறேன் என சொன்னார். நான் கொத்தனார் வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன் என்று சொன்னேன். லஞ்சமாக பணம் கொடுத்தால்தான் வேலையை முடித்து தருவேன், பணம் ஏற்பாடு செய்து கொண்டு வா எனச் சொன்னார். என்னால் பணம் ஏற்பாடு செய்ய முடியவில்லை. பீஸுக்குண்டான பணத்தை மட்டும் எடுத்து கொண்டு 23.11.2017ந்தேதி காலை E.B. ஆபிஸுக்கு சென்று, A.E. கண்ணன் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் என் மனுக்களை எடுத்து பார்த்துவிட்டு, அவர் என்னிடம் நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கீர்களா என கேட்டார். நான் பணம் கிடைக்கவில்லை, பீஸுக்கு மட்டும் எடுத்து வந்துள்ளேன் என்று சொன்னேன். அவர் என்னிடம் மொத்தம் 9500/- ரூபாய் செலவாகும், 9500/- ரூபாயை கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிடு வேலையை முடித்து தருகிறேன் எனக்கூறி அவர் வைத்திருந்த 3 மனுவையும் தூக்கி எறிந்துவிட்டார். என்னிடம் A.E. கண்ணன் பணம் கேட்டபோது, எனக்கும் அவருக்கும் நடந்த உரையாடலை என் செல்போனில் பதிவுசெய்துள்ளேன். எனக்கு A.E. மின் இணைப்பு வழங்க, பெயர் மாற்றம் செய்ய மொத்தமாக கேட்ட பணம் ரூ.9,500/- கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம், மின் இணைப்பு பெயர் மாற்றம், புதிய மின் இணைப்பு வழங்க ரூ.9,500/- லஞ்சமாக

கேட்ட தமிழ்நாடு மின்சார வாரிய உதவி பொறியாளர் கண்ணன் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் A.E. தூக்கி எறிந்த மூன்று மனு கோப்புகளையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) R.Ramesh, 24.11.2017.

அம்மா,

24.11.2017 ந் தேதி காலை 11.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது திரு.R.ரமேஷ், த/பெ.S.இராதாகிருஷ்ணன், 57/2326, வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அப்புகார் மனு மீது முதல் விசாரணை செய்ய அனுமதி கோரி, காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு புகார் மனுவின் நகல் மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. Sd/- R.Venkatesan, Inspr. of Police, V&AC, Thanjavur. 24/11/17.

24.11.2017 ஆம் தேதி 12.00 மணிக்கு மேற்படி புகார் மீது முதல் விசாரணை மேற்கொள்ள கிடைக்கப்பெற்ற குறிப்பாணை PE.403/2017/EB/TH -ன்படி முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. Sd/- R.Venkatesan, Inspr. of Police, V&AC, Thanjavur. 24/11/17.

முதல் விசாரணையில் மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலணை செய்தேன். பின்பு மேற்படி மனுதாரர் ஆஜர்படுத்திய தனது செல்போனில் பதிவு செய்யப்பட்டிருந்த, மனுதாரருக்கும், எதிரிக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் விவரங்கள் ஆடியோ பதிவு செய்யப்பட்டிருந்ததை, கேட்ட பிறகு, எனது அலுவலக கணிணியில் மேற்படி ஆடியோ விவரத்தை பதிவிறக்கம் செய்த பிறகு, செல்போனை மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆடியோ விபரத்தை ஒரு CDயில் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி ஆடியோவில் எதிரி புகார்தாரரிடம் லஞ்சம் கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. இது குறித்து உரிய தகவல் காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு தெரிவித்தும், மேற்படி புகார் மனு மீது 24.11.2017 ஆம் தேதி 13.00 மணியளவில் தஞ்சாவூர் V&AC Cr.No.13/2017 u/s 7 of P.C. Act, 1988 - ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd/- R.Venkatesan, Inspr. of Police, V&AC, Thanjavur. 24/11/17.

அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு, புகார்தாரர் ஆஜர்படுத்திய மூன்று அசல் மனு கோப்புகளில் இருந்து நகல் எடுக்கப்பட்டது மற்றும் ஆடியோ பதிவிறக்கம் செய்யப்பட்ட CD ஒன்று ஆகிய அனைத்தையும் இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

24-11-17.

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION
THANJAVUR